10/=

பக்கங்கள் 06

எதிரொலி
Ethiroli

குரல் 01 | அதிர்வு 84 | சனிக்கிழமை ஒகஸ்ட் 05 2017 | ethirolimedia@gmail.com | 021 300 48 48

# பதவியை உதறுங்கள்!

## ரவிக்கு மைத்திரி போட்ட உத்தரவு

வெளிவிவகார அமைச்சர் ரவி கருணா நாயக்கவை அமைச்சுப் பதவியில் இருந்து இராஜினாமா செய்யுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சிங்கள ஊடகமொன்று, இன்று 06

# துன்னாலை சுற்றிவளைப்பு




துன்னாலை குடத்தனைப் பகுதியில் விசேட அதிரடிப் படையினரும்,பொலிஸாரும் இணைந்து இன்று அதிகாலை முதல் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இந்தச் சுற்றிவளைப்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. உரிய ஆவணங்கள் இல்லை என்று தெரிவித்து ஐந்து ஹன்ரர் ரக வாகனங்களும், 9 மோட்டார் சைக்கிள்களும் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

பஸ்களில் இரவோடு இரவாகக் கொண்டு வந்து குவிக்கப்பட்ட சிறப்பு அதிரடிப் படையினரும், பொலிஸாரும் இணைந்து துன்னாலைப் பகுதியை முழுமையாகச் சுற்றிவளைத்து வீடு வீடாகச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். விசேட அதிரடிப் படையினர் மோட்டார் சைக்கிள்களிலும் அந்தப் பகுதிகளில் ரோந்தில் ஈடுபட்டதால் மக்கள் பெரும் அச்சமடைந்தனர். 06





## வாள்வெட்டிகளுக்கு மோட்டார் சைக்கிள் கொடுத்தவர் கைது

கோப்பாய் பொலிஸாரை வாளால் வெட்டியவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் இன்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார். கொக்குவில் அம்பாள் வீதியைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 30 ஆம்திகதி கோப்பாய் பொலிஸார் மீது கொக்குவில் நந்தாவில் பகுதியில் வைத்து நடத்தப்பட்ட வாள்வெட்டுடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தில் இதுவரை ஐவர் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## புத்தூரில் இளைஞன் மீது மர்மக் கும்பல் தாக்குதல்!

யாழ்.புத்தூர் சிறுபிட்டி சிவன் கோவிலடியில் தோட்ட வேலை செய்து கொண்டிருந்த இளைஞரை ஏழு பேர் கொண்ட இனந்தெரியாத மர்மக் கும்பல் ஒன்று கண்மூடித்தனமாகத் தாக்கியுள்ளது.

குறித்த இளைஞன் நேற்று மாலை சிறுப்பிட்டிச் சிவன் கோவிலடியில் தோட்ட வேலையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அங்கு வந்த 7 பேர் கொண்ட இனந்தெரியாத கும்பல் ஒன்று, இரும்புக் கம்பிகள் மற்றும் பொல்லுகள் என்பவற்றால் அந்த இளைஞனைச் சரமாரியாகத் தாக்கியுள்ளது.

தலையிலும், முகத்திலும் படுகாயங்களுடன் குறித்த இளைஞன் யாழ். போதனாவைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனு 06

## காணாமல் போனோரின் விபரம் கேட்கும் ஆளுநர்

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர் விவரங்களை சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் தம்மிடம் ஒப்படைக்குமாறும், அதன் பின்னர் உரிய அதிகாரிகளிடம் கலந்துரையாடி தீர்வை பெற்றுத்தருவதாகவும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம தெரிவித்துள்ளார். வடக்கு, கிழக்கில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால், கிழக்கு ஆளுநர் செயலகத்துக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம், 06

## நிலாவரைக் கிணற்றின் மர்மம் துலங்கியது!!



நீண்டகாலமாக அடிமுடி காணப்படாமல் இருந்த புத்தூர்-நிலாவரைக் கிணற்றின் ஆழம் கண்டறியப்பட்டுள்ளது. கடற்படையின் விசேட சுழியோடிகள் நவீன ரோபோக்களின் உதவியோடு நிலாவரையின் ஆழத்தை அளந்துள்ளனர். 06

## ஆரம்பம்




உலக தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் 13வது சர்வதேச மாநாடு இன்று யாழ்.பல்கலைகழக கைலாசபதி கலையரங்கத்தில் ஆரம்பமாகியது.விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் கூரே, கல்வி இராஜாங்க அமைச்சர் ராதாகிருஸ்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, அரச அதிபர் வேதநாயகம், துணைவேந்தர் விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-11)

## புலிகளின் ஆயுதங்கள் மன்னாரில் மீட்பு



மன்னார் - மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவின் பாப்பாமோட்டை பிரதேசத்திலுள்ள பதுங்கு குழியொன்றில் இருந்து, நேற்று ஒருதொகை ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக, அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பதுங்கு குழி, விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, 81 மில்லி மீற்றர் ரக மோட்டார் குண்டுகள் நான்கும், 60 மில்லி மீற்றர் ரக மோட்டார் குண்டுகள் மூன்றும் மீட்கப்பட்டுள்ளன.

விமானப் படை அதிகாரிகளுக்கு கிடைத்த புலனாய்வுத் தகவல்களுக்கமையவே குறித்த ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (ஆ)

# காணியை விடுவிக்கக் கோரி நாவலடியில் உண்ணாவிரதம்




மட்டக்களப்பு மாவட்டத்தின் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் நாவலடி இராணுவ முகாம் அமைந்துள்ளது. அந்தக் காணியை மீளப் பெற்றுத் தரக் கோரி மக்கள் முன்னர் போராட்டம் நடத்தி வந்தனர். இந்நிலையில் இரண்டாவது தடவையாக பொது மக்கள் சுழற்சி முறையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்றுப் பிற்பகல் நாவலடி இராணுவ முகாம் முன்பாக ஆரம்பித்துள்ளனர்.

1968ஆம் ஆண்டு தொடக்கம் குறித்த காணியில் மக்கள் குடியிருந்துள்ளனர். பின்னர் 1990ஆம் ஆண்டு ஏற்பட்ட யுத்தத்தின் காரணமாக அவர்கள் இடம்பெயர்ந்திருந்தனர். தற்போது நல்லாட்சி அரசின் மூலம் இராணுவப் பிடியிலுள்ள காணிகள் விடுவிக்கப்படும் நிலையில் தங்களுடைய காணிகளையும் பெற்றுத் தருமாறு கோரி காணி உரிமையாளர்கள் எட்டு பேர் போராட்டத்தில் ஈடுபட்டனர். (உ)

# சட்டவிரோத வலைகள்: 15 பேர் கைது

மட்டக்களப்பு முகத்துவாரத்தை அண்மித்த கடற்பரப்பில் சட்டவிரோத வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடியில் ஈட்டுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டு கடற்படையினரால் 15 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களின் மீன்பிடிப் படகுகளும், வலைகளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீன்பிடிக்காகப் பயன்படுத்தப்பட்ட ஐந்து படகுகள், வலைகள் மற்றும் 40 குதிரை வலுக்கொண்ட நான்கு இயந்திரங்களும் 15 குதிரை வலுக்கொண்ட ஒரு இயந்திரமும் கைப்பற்றப்பட்டு மாவட்ட கடற்தொழில் நீரியல் வளங்கள் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ)

# வாழ்வாதார உதவி



கரவெட்டிப் பிரதேசசெயலகத்துக்கு உட்பட்ட பயனாளிகளுக்கு இன்று காலை கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான க.தர்மலிங்கம் மற்றும் வே.சிவயோகம் ஆகியோர் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து 30 பயனாளிகளுக்கு இவற்றினைக் கையளித்தார்கள். (உ-11)

# திறப்பு விழா



மதவாச்சியில் அமைக்கப்பட்டுள்ள "பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க" புதிய பொருளாதார மத்திய நிலையத்தை பொதுமக்களிடம் ஜனாதிபதி கையளித்தார். ஜனாதிபதி தலைமையில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்த நிகழ்வில் அமைச்சர் துமிந்த திசாநாயக்க, வடமத்திய மாகாண ஆளுநர் பி.பீ.திசாநாயக்க, வட மத்திய மாகாண முதலமைச்சர் பேசல ஜயரத்ன ஆகியோர் உள்ளிட்ட பிரதேச மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (உ)

# ஆடை தொடர்பில் அமைச்சுக்கு கடிதம்

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகவுள்ளது. இந்நிலையில் பரீட்சை எழுதவிருக்கும் முஸ்லிம் மாணவிகளின் ஆடை தொடர்பில் அகில இலங்கை ஜம் இய்யத்துல் உலமா சபை உள்ளிட்ட இஸ்லாமிய அமைப்புகள் கல்வி அமைச்சுக்கு கடிதம் எழுதியுள்ளன.

மாணவிகள் தங்கள் கலாசார ரீதியான சீருடையுடன் தேர்வு எழுதுவது தொடர்பாக, எவ்விதமான பிரச்சினைகளும் ஏற்படாமல் இருப்பதை மத்திய கல்வி அமைச்சகம் உறுதிப்படுத்த வேண்டும் என அக்கடிதத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற கல்விப் பொது தராதரப் பத்திர சாதாரண பரீட்சை எழுதிய முஸ்லிம் மாணவிகள், சில தேர்வு நிலையங்களில் இது தொடர்பாக எதிர்கொண்ட நெருக்கடி நிலை காரணமாகவே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(உ)

# புலமைப்பரிசில் வழிகாட்டல் கருத்தரங்கு



மக்கள் வங்கி வவுனியா கிளையின் ஏற்பாட்டில் இன்று வவுனியா கலாசார மண்டபத்தில் காலை 8.30 மணி தொடக்கம் மதியம் ஒரு மணி வரை தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான விசேட வழிகாட்டல் கருத்தரங்கு இடம்பெற்றது.

மக்கள் வங்கியின் வன்னிப் பிராந்திய முகாமையாளர் சிவா சிவக்கொழுந்து தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வவுனியா மக்கள் வங்கி முகாமையாளர் கு.கோடீஸ்வரன், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்,மாணவர்கள் , மக்கள் வங்கி பிராந்திய மற்றும் வவுனியா கிளை ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (உ)

# மோசடி முகவர் கைது

தொழில் வாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி, பண மோசடியில் ஈடுபட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் பொல்கஹவல, பொல்பிட்டிய பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பொல்கஹவல பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர். நாட்டின் வெவ்வேறு பிரதேசங்களில் வசிக்கும் நபர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி, இவ்வாறு மோசடியில் ஈடுபட்டு வந்தமை சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபர் கட்டுபான பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய ஒருவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (உ)

மாதாந்தம் ஒரு இலட்சம் வரை சம்பாதிக்கலாம்

விளம்பரத் துறையில் அனுபவம் / ஆர்வம் உள்ளவரா நீங்கள்? அப்படியாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்

முழு நேரமாகவோ / பகுதி நேரமாகவோ உங்கள் வசதிக்கேற்ப பணி புரியலாம்

தொடர்புகளுக்கு : 021 300 4848

# வைத்தியசாலை ஆலயத்தின் உண்டியல் உடைத்துத் திருட்டு

வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலை வாளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்தில் நேற்று இரவு இனந்தெரியாத நபர்களினால் உண்டியல் உடைத்து திருடப்பட்டுள்ளது.

வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள ஆலயத்தின் மின்விளக்கினை அங்கு கடமையிலிருப்பவர் நேற்று மாலை ஒளிரவிட்டுள்ளார். அவர் அதனை இன்று அதிகாலை அணைக்கச் சென்றபோதே ஆலயத்தின் உண்டியல் உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார். இது தொடர்பில் வவுனியாப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது. (உ)



## 50 ஆண்டுகளில் 4000 மொழிகள் அழிவடையும்


உலகில் உள்ள 6 ஆயிரம் மொழிகளில் கிட்டத்தட்ட 4 ஆயிரம் மொழிகள், இன்னும் 50 ஆண்டுகளில் அழியக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. அவற்றில் 10 சதவீத மொழிகள் இந்தியாவில் இருக்கின்றன என்று ஒரு ஆய்வின் முடிவில் அதிர்ச்சித் தகவல் வெளியாகி உள்ளது.
அந்த ஆய்வில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,
இப்படி அழிவின் விளிம்பில் உள்ள மொழிகளில் இந்தியாவில் உள்ள சில மொழிகளும் அடங்குகின்றன. இந்தியாவில் தற்போது 780 மொழிகள் உள்ளன. அவற்றில் 400 மொழிகள் அழியக்கூடிய ஆபத்தை எதிர் நோக்கி உள்ளன.
மொழி, மனிதர்களால் உருவாக்கப்பட்டு, மனிதர்களின் பெரும் உழைப்பினால் வருவதாகும். ஒரு மொழி உருவாவதற்கு முன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் செலவிடப்படுகின்றன. நாம் நமது மொழிகளை இழந்து விட்டால், அது நமது முன்னோர்களுக்கும், முன்னோடிகளுக்கும் நாம் செய்கிற மிகப்பெரிய அநீதி ஆகும்.எனவே ஒவ்வொரு இனத்தவரும் தத்தம் மொழிகளைக் காக்க முன்வரவேண்டும் என அந்த ஆய்வில் தீர்வும் கூறப்பட்டுள்ளது. (இ)

# நேற்று ஹீரோ..இன்று கைதி!!




உலகளவில் நிகழ்ந்த இணையத் தாக்குதலைத் தடுக்க உதவிய பிரிட்டன் இணைய நிபுணர் மார்கஸ் ஹட்சின்ஸ் கைது செய்யப்பட்டுள்ளார். வங்கி கணக்குகளின் கடவுச் சொற்களைத் திருடும் மென்பொருளைத் தயாரித்து பரப்பிய குற்றத்துக்காக இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
உலகம் முழுவதும், கடந்த மே மாதம் 'வான்னாக்ரை' எனப்படும் நாசகார வைரஸ் முன்னணி நிறுவனங்களின் கணினிகளைத் தாக்கியது. இதன் காரணமாக, ஏராளமான கணினிகள் செயலிழந்தன. பல நிறுவனங்கள், கோடிக்கணக்கான ரூபா நஷ்டத்தைச் சந்திக்க நேரிட்டது. இந்த நிலையில் பிரிட்டனைச் சேர்ந்த கணினி நிபுணரான, மார்கஸ் ஹட்சின்ஸ் அந்த வைரஸைக் கட்டுப்படுத்த உதவினார். இதனால், உலகளவில் அவருக்கு பாராட்டுக்கள் குவிந்தன.
இந்நிலையில் கணினிகளில் வைரஸைப் பரவவிட்டு வாடிக்கையாளர்களின் வங்கி கணக்குகளின் கடவுச்சொற்கள் உள்ளிட்ட தகவல்களை மார்கஸ் திருடி வந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தயாரித்துப் பரப்பியதாக, மார்கஸை அமெரிக்கப் பொலிஸார் அதிரடியாகக் கைது செய்துள்ளனர். (இ)

## அதிமுக அணியில் முற்றுகிறது குழப்பம்



அதிமுக அம்மா அணியின் புதிய நிர்வாகிகள் பட்டியலை டிடிவி தினகரன் நேற்றுச் சென்னையில் அறிவித்தார்.
அதிமுக அம்மா அணியில் முதல்வர் கே.பழனிச்சாமி தலைமையில் பெரும்பாலான எம்.எல்.ஏ.க்களும் டிடிவி தினகரன் தலைமையில் சில எம்.எல்.ஏ.க்களும் செயற்பட்டு வருகின்றனர்.
இதனையடுத்து எடப்பாடி பழனிச்சாமிக்கும் தினகரனுக்கும் இடையே அதிகார மோதல் ஏற்பட்டுள்ளதால் கட்சியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
இந்நிலையில் டிடிவி தினகரன் 18 பேர் கொண்ட புதிய நிர்வாகிகள் பட்டியலை அதிரடியாக அறிவித்தார்.
முன்னாள் அமைச்சர் பழனியப்பன், செந்தில் பாலாஜி, தோப்பு என்.டி. வெங்கடாச்சலம், எஸ்.டி.கே. ஜக்கையன், சி.சண்முகவேலு, மாதவரம் மூர்த்தி, டிகேஎம் சின்னையா, முக்கூர் சுப்பிரமணியன், ஆர்.மனோகரன் சேலஞ்சர் துரை, கே.டி.பச்சைமால், ஜி.செந்தமிழன், ஆர்.பி.ஆதித்தனு, சாருபாலா தொண்டைமான், எஸ். காமராஜ், மாணிக்கவாசகர் ஆகியோர் அதிமுக அம்மா அணியின் அமைப்புச் செயலாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளதாக டிடிவி தினகரன் அறிவித்துள்ளார்.இதனால் அதிமுகவில் ஏற்பட்டிருந்த குழப்பநிலை இன்னும் தீவிரமடைந்துள்ளது. (இ)

## கரடி சுட்டுக் கொலை



சுவீடனில் வனவிலங்குப் பூங்காவில் ஊழியர் ஒருவரைத் தாக்கி கொன்ற கரடியை அதிகாரிகள் சுட்டுக் கொன்றுள்ளனர்.
சம்பவ தினத்தன்று குறித்த வனவிலங்குப் பூங்காவில், கரடி கூண்டுக்குள் அடைக்கப்பட்டிருப்பதாகத் தவறாகக் கருதிய பூங்கா ஊழியர், கரடியின் கூண்டுக்கு அருகே சென்று சுத்தம் செய்யச் சென்றுள்ளார்.
இந்த நிலையில், திடீரென கூண்டை விட்டு வந்த கரடி ஊழியரைத் தாக்கியுள்ளது. பாதிக்கப்பட்ட ஊழியர் ஹெலிகொப்டர் மூலம் மீட்கப்பட்டு, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.எனினும் அவரைக் காப்பாற்றமுடியவில்லை.
அதேசமயம், ஊழியரைக் காப்பாற்றும் முயற்சியில், 2 வயதான அந்தக் கரடி சுட்டுக்கொல்லப்பட்டதாக பூங்கா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.(இ)



## சீனாவின் டிரோன்களை கைவிடும் அமெரிக்கா

சீனத் தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றிடம் இருந்து அமெரிக்க இராணுவம் தனதுபயன்பாட்டுக்கென டிரோன்கள் எனப்படும் ஆளில்லா விமானங்களைத் தருவித்து வந்தது. இப்போது திடீரென இவற்றின் பயன்பாடுகளை ஒட்டுமொத்தமாக நிறுத்தும்படி தனது அணிகளுக்கு அமெரிக்க இராணுவம் உத்தரவிட்டுள்ளது.
இந்த டிரோன்களால் சைபர் ஆபத்துகள் ஏற்படவாய்ப்பிருப்பதாக கூறியுள்ள அமெரிக்கா, எவ்வாறு இந்த வாய்ப்பு ஏற்படுகிறது என்பதைக் கூறவில்லை. இந்த முடிவு குறித்து கருத்து வெளியிட்ட குறித்த சீன நிறுவனம் இப்படி முடிவெடுப்பதற்கு முன் தங்களைக் கலந்தாலோசிக்கவில்லை எனக் கூறியுள்ளது.
மேலும் அமெரிக்காவின் சந்தேகங்களுக்கு பதில் அளிக்கத்தயாராக இருப்பதாகவும் அது கூறியுள்ளது.
இது பற்றி அறிக்கை வெளியிட அமெரிக்காவும் தயாராகி வருவதாகத் தெரிகிறது .இந்த ஆளில்லா விமானங்களை சீனா தனது கட்டுப்பாட்டுக்குள் இரகசியமாகக் கொண்டுவந்து, அமெரிக்காவின் இராணுவ நகர்வுகளை மோப்பம் பிடிக்கலாம் என்ற அச்சமே இந்த நடவடிக்கைக்குக் காரணம் எனச் சொல்லப்படுகின்றது. (இ)

## எஸ்.எம்.எஸ் கொலை: காதலிக்கு சிறை!



அமெரிக்காவில் காதலனைத் தற்கொலைக்குத் தூண்டும் வகையில் குறுஞ்செய்திகள்(எஸ்.எம்.எஸ்) அனுப்பிய பெண்ணுக்கு இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
அமெரிக்காவில் கான்ராட் ராய் என்னும் இளைஞர் மிச்செலி கார்டர் என்ற பெண்ணைக் காதலித்து வந்தார்.எனினும் இருவருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதனால் காதலியான மிச்செலி, கடுமையான வார்த்தைகள் கொண்ட குறுந்தகவல்களை காதலுக்கு அனுப்பத் தொடங்கினார்.
காதலியின் குறுந்தகவல்களால் மன அழுத்தத்துக்கு உள்ளான கான்ராட் ராய், 'ஒருவித நச்சுவாயுவைப் பயன்படுத்தி தற்கொலை செய்தார். அதனை அடுத்து நடைபெற்ற விசாரணைகளில் கான்ராட் ராயின் தற்கொலைக்கு, மிச்செலியின் குறுந்தகவல்களே காரணம் எனத் தெரிய வந்தது. இதனால் அவருக்கு இரண்டரை வருடங்கள்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (இ)

## மலையுடன் மோதி விமானம் விபத்து



சுவிட்ஸர்லாந்தில் இளைஞர் முகாமொன்றில் பங்கேற்ற சிறியரக விமானம் ஒன்று மலையுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.இதனால் அந்த விமானம் சுக்குநூறாகி உடைந்து வீழ்ந்தது.இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 14 வயதுடைய இரண்டு சிறுவர்களும், விமானியும் உயிரிழந்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளது.
மேலும், விபத்தில் சிக்கி பலத்த காயமடைந்த 17 வயதுச் சிறுவனொருவன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (இ)

# வெங்கையாவுக்கு வெற்றி வாய்ப்பு



இந்தியத் துணை ஜனாதிபதித் தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெற்றது. இந்தத் தேர்தலில் பா.ஜனதா வேட்பாளரான வெங்கையா நாயுடுவுக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.
தொடர்ந்து 2 ஆவது முறையாகத் துணை ஜனாதிபதி பதவியை வகித்து வரும் ஹமீது அன்சாரியின் பதவிக்காலம் 10ஆம் திகதியுடன் முடிவுக்கு வருகிறது. எனவே புதிய துணை ஜனாதிபதியைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் இன்று சனிக்கிழமை நடைபெற்றது.
இதில் ஆளும் பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வேட்பாளராக, முன்னாள் நகர்ப்புற வளர்ச்சி மற்றும் தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் வெங்கையா நாயுடு நிறுத்தப்பட்டு உள்ளார். காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சிகள் சார்பில் மகாத்மா காந்தியின் பேரனும், மேற்கு வங்காள முன்னாள் ஆளுநருமான கோபால கிருஷ்ணா காந்தி போட்டியிடுகிறார்.
துணை ஜனாதிபதித் தேர்தலில் நாடாளுமன்ற இரு அவைகளின் உறுப்பினர்கள் மட்டுமே வாக்களிக்க முடியும். இதற்காக இந்திய நாடாளுமன்றத்தில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு , முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற்றது.இன்றிரவு 7 மணிக்கு புதிய துணை ஜனாதிபதி யார் என்ற முடிவு அறிவிக்கப்படும். (இ)



# சந்தேகம்!

கனடாவின் டொரெண்டோவில் நடைபெறவிருக்கும் ரோஜர்ஸ் கிண்ணத்துக்கான டென்னிஸ் தொடரிலிருந்து மரியா ஷரபோவா விலகியுள்ளார்.

ரஷ்யாவின் முன்னணி டென்னிஸ் வீராங்கனையான மரியா ஷரபோவா, ஐந்து தடவைகள் கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவர். ஊக்கமருந்து பயன்படுத்தியதாக 15 மாதங்கள் தடைபெற்றார். அதன்பின் தற்போது டென்னிஸ் அரங்கில் களமிறங்கி விளையாடி வருகிறார்.

எதிர்வரும் 28ஆம் திகதி அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் தொடர் நடைபெறவுள்ள நிலையில், இதற்கு முன்னோட்டமாக ரோஜர்ஸ் ஓபன் டென்னிஸ் தொடர் கருதப்படுகிறது.

இந்தத் தொடரில் விளையாடுவதற்காக மரியா ஷரபோவாவுக்கு 'வைல்ட் கார்ட்' வழங்கப்பட்டது. இதில் சிறப்பாகச் செயற்பட்டு, அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் தொடரில் சிறப்பாக விளையாட முடிவு செய்திருந்தார்.

ஆனால், மரியா ஷரபோவாவின் இடது முழங்கையில் காயம் ஏற்பட்டமையால் ரோஜர்ஸ் தொடரிலிருந்து விலகியுள்ளார். இதனால், அமெரிக்க கிராண்ட்ஸ்லாம் தொடரிலும் ஷரபோவா பங்கேற்பது சந்தேகம் எனக்கூறப்படுகிறது. (ஒ)

# அரையிறுதியில் ஐக்கிய வி.க.

## ஆவரங்கால், சண்டிலிப்பாய் அணிகள் காலிறுதிக்குத் தகுதி

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற 'பி' பிரிவு அணிகளுக்கான ஆட்டங்களில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மற்றும் சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகங்கள் வெற்றிபெற்றன.

முதலில் நடைபெற்ற காலிறுதியாட்டத்தில் நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக் கழகம் 25:23, 25:22 என்ற புள்ளிக் கணக்கில் நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை வென்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

பின்னர் நடைபெற்ற முதல் சுற்று ஆட்டங்களில், ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 25:20, 25:15 என்ற புள்ளிக் கணக்கில் அச்சுவேலி கலைமகள் அணியையும், சண்டிலிப்பாய் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 25:20, 25:20 என்ற புள்ளிக் கணக்கில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகத்தையும் வென்று காலிறுதிக்குத் தகுதிபெற்றன. (ஐ)

# இன்றைய ஆட்டங்கள்

திக்கம் மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் இன்று இரவு இரு ஆட்டங்கள் நடைபெறவுள்ளன.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும் முதலாவது போட்டியில் சென். பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து முல்லைத்தீவு செம்மலை உதயசூரியன் விளையாட்டுக் கழகம் மோதும்.

பின்னர் 8 மணிக்கு ஆரம்பமாகும் ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சன்ஸ்டர் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

* * * * * * * * *

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் 62ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் கரப்பந்தாட்டத் தொடரில் இன்று இரவு 'பி' பிரிவு அணிகளுக்கிடையிலான காலிறுதியாட்டம் ஒன்று நடைபெறவுள்ளன.

இரவு 7.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த ஆட்டத்தில் மீசாலை சீமா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஐ)

# ஆனைக்கோட்டை யூனியன், அராலி ஏல் அணிகள் வெற்றி

திக்கம் மத்திய சன சமூக நிலையம் நடத்திவரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு நடைபெற்ற ஆட்டங்களில் ஆனைக்கோட்டை யூனியன் மற்றும் அராலி ஏஎல் அணிகள் வெற்றிபெற்றன.

திக்கம் மத்திய சன சமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று இரவு இரு ஆட்டங்கள் நடைபெற்றன.

இரவு 7 மணிக்கு ஆரம்பமாகிய முதலாவது போட்டியில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பொம்மர்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் போட்டமையால் ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதனால், வெற்றியைத் தீர்மானிப்பதற்காக 'பனால்டி' உதை வழங்கப்பட்டது.

இதில் யூனியன் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

பின்னர் 8 மணிக்கு ஆரம்பமாகிய இரண்டாவது ஆட்டத்தில் ஸ்மாட் போய்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து அராலி ஏஎல் விளையாட்டுக்கழகம் மோதியது.

இதில் அராலி ஏஎல் அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.(ஐ)



# தடுமாறுகிறது 'தமிழ் தலைவாஸ்'

இந்தியாவில் நடைபெற்றுவரும் புரோ கபடி லீக்கில் பெங்களூருக்கு எதிரான நேற்றைய ஆட்டத்தில் தமிழ் தலைவாஸ் அணி மயிரிழையில் தோல்வியைத் தழுவியது.

12 அணிகளுக்கிடையிலான 5ஆவது புரோ கபடி தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடந்து வருகிறது. இதில் நாக்பூரில் நேற்றிரவு நடைபெற்ற 12ஆவது லீக் ஆட்டத்தில் தமிழ் தலைவாஸை எதிர்த்து பெங்களூர் புல்ஸ் மோதியது.

விறுவிறுப்பான இந்த மோதலில் தொடக்கத்தில் ஆதிக்கம் செலுத்திய பெங்களூர் புல்ஸ் அணி, 10ஆவது நிமிடத்திலேயே தமிழ் தலைவாஸை ஆட்டமிழக்கச் செய்து, புள்ளிகளை மளமளவென அள்ளியது. இதன் விளைவாக முதல் பாதியில் 8:23 என்ற புள்ளிக் கணக்கில் தமிழ் தலைவாஸ் மோசமான நிலையில் பரிதவித்தது.

இரண்டாவது பாதியில் தமிழ் தலைவாஸ் அணியினர் புதிய வியூகம் அமைத்து துடிப்புடன் செயற்பட்டனர். ஆட்டத்தின் ஒரு நிமிடம் எஞ்சியிருந்த போது 30:31 என்ற புள்ளிக் கணக்கில் ஆட்டம் நகர்ந்ததால் பரபரப்பு தொற்றிக்கொண்டது.

எனினும், இறுதியில் தமிழ்தலைவாஸ் அணி 31:32 என்ற புள்ளிக் கணக்கில் தோல்வியைத் தழுவியது

முதலாவது ஆட்டத்தில் தெலுங்கு டைட்டன்ஸிடம் தோற்றிருந்த தமிழ் தலைவாஸுக்கு இது 2ஆவது தோல்வியாகும்.

'பிக்பாஸ்' வீட்டில் ஒருநாளை தமிழ் தலைவாஸ் அணியினர் கழித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## பிக்பாஸ் பரபரப்பு:



# வெளியேறினார் ஓவியா?

'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் நேற்று மிகவும்பரபரப்பானசூழல்நிலவியது. ஓவியா - ஆரவ் காதலின் பிளவால், ஒரு நிலைக்கு மேல் மன அழுத்தம் தாங்க முடியாமல் நீச்சல் குளத்துக்குள் மூழ்கி தற்கொலைக்கு முயன்றார்.

இதனையடுத்து 'பிக்பாஸ்', ஓவியாவின் மேலாளர் மற்றும் வைத்தியர் வந்துகொண்டிருக்கின்றனர் எனவும், அவர்கள் வந்த பின்னர் ஓவியா வெளியேறிவிடலாம் என்றும் கூறியிருந்தார். அதே நேரம் நேற்று ஓவியா காரில் செல்வது போன்ற புகைப்படம் வைரலாகியது.

இதனால், ஓவியாவின் ரசிகர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர். ஓவியாவுக்கு ஆதரவாகக் கருத்துக்களை வெளியிட்டும் வருகின்றனர்.

இதேவேளை, ஓவியா வைத்திய பரிசோதனையை முடித்துக் கொண்டு மீண்டும் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் கலந்துகொள்வார் எனவும் கூறப்படுகிறது. (ஒ)

# பொலிஸ் அதிரடி



'பிக்பாஸ்' பிரச்சினைதான் தற்போது தமிழகத்தில் பெரும் சர்ச்சையை உண்டாக்கியுள்ளது. இதில் நேற்று ஓவியா தற்கொலை முயற்சிசெய்தார் என்ற தகவலோடு, பிக்பாஸ் வீட்டுக்குள் பொலிஸார் புகுந்து விசாரணை நடத்திச் சென்றதாகவும் பரபரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இது சாதாரண விசாரணைதான் பெரிதாக எதுவும் இல்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

'பிக்பாஸ்' நிகழ்ச்சியைத் தயாரித்தவர்களே எதிர்பாராத அளவுக்கு இந்த நிகழ்ச்சி மிகவும் பிரபல்யமாகிவிட்டது என்றுதான் கூறவேண்டும். (ஒ)

# ஆண்டவரின் தீர்ப்பு என்ன?



'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் சனிக்கிழமை மற்றும் ஞாயிறு என்றால் எதிர்பார்ப்பு மிகவும் அதிகமாகவே இருக்கும். ஏனென்றால் அந்த இரு நாட்களிலும் தான் 'பிக்பாஸ்' நிகழ்ச்சியில் ஆண்டவன் என வர்ணிக்கப்படும் கமல் வந்து நிகழ்ச்சியிலுள்ள குறை நிறைகளைக் கூறி, நெற்றியடி கொடுக்க வேண்டியவர்களுக்கு கொடுப்பார். அறிவுரை கூறவேண்டியவர்களுக்கு அறிவுரை கூறுவார்.

ஒவ்வொரு சனிபோல் இல்லாமல் இன்றைய இரவு மிகவும் பரபரப்பான - எதிர்பார்ப்பு எகிறியுள்ள இரவாக அமையப்போகிறது.

ஏனென்றால் ஓவியாவின் பிரச்சினையை இன்று கமல் கையிலெடுப்பார். இதற்கான தீர்ப்பை கமல் எப்படி வழங்கப்போகிறார் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாக உள்ளது. (ஒ)



# வடமராட்சியில் வறட்சியால் கால்நடைகள் உயிரிழப்பு

வடமராட்சி கரவெட்டிப் பகுதியில் வயல் பகுதியில் அமைந்துள்ள குளங்கள் வெப்பம் காரணமாக வற்றி வறண்ட நிலமாக காணப்படுகின்றன. இதனால் கால்நடைகள் தண்ணீருக்காக அலைந்து திரிவதையும் சில கால்நடைகள் இறந்து கிடப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. யுத்த காலத்துக்குப் பின்னர் விவசாய அமைப்புகளும் விவசாயத் திணைக்களங்களும் குளங்களை ஆழமாக்கவோ கழிவுகளை அகற்றவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்க முன்வரவில்லை. இதனாலேயே நீர் நிலைகள் விரைவில் வற்றிப் போவதாகக் கூறப்படுகிறது. (உ-11)

# ஒரே பிரதேசத்தில் மாறுபட்ட வாக்காளர் எண்ணிக்கை



வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட பிரிவுகளில் வாக்காளர் எண்ணிக்கையில் காணப்படும் மாற்றங்கள் தொடர்பாக உரிய விளக்கம் அளிக்குமாறு கோரி தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரியவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் அவசர கடிதமொன்றை அனுப்பியுள்ளார். அக்கடிதத்தில் , வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வாக்காளர் இடாப்புக்கும் வவுனியா வடக்குப் பிரதேச சபையின் கீழுள்ள வாக்காளர் இடாப்புக்கும் இடையில் ஏற்பட்டுள்ள வாக்காளர்கள் எண்ணிக்கை வித்தியாசம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். குறிப்பாக வவுனியா வடக்குப் பிரதேச சபைக்கு வவுனியா தேர்தல்கள் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள 2016 ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் பட்டியலில் 11,747 பேரும், வவுனியா வடக்குப் பிரதேசச் செயலாளருக்கு வழங்கப்பட்ட வாக்காளர்கள் பட்டியலில் 8,577 பேரும், பதிவு செய்யப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இந்த இரு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்ட பட்டியலுக்கிடையில் 3,170 வாக்காளர்களின் எண்ணிக்கை வித்தியாசப்படுவதற்கான காரணத்தை தெளிவுபடுத்தி உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்" - என்றுள்ளது. (உ)

# இன்றைய கருத்தோவியம்



# அவன்கார்ட் தலைவருக்கு எதிராக குற்றப்பத்திரம்

அவன்கார்ட் நிறுவனத்தின் முன்னாள் தலைவர் மேஜர் நிசங்க சேனாதிபதி மற்றும் ரக்ன லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனத்தின் முன்னாள் தலைவரான மேஜர் ஜெனரல் பாலித பெர்னான்டோ ஆகியோருக்கு எதிராக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவினால் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இவர்களுக்கு எதிராக 47 குற்றச்சாட்டுகளை முன்வைத்து கொழும்பு மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில், பாதுகாப்புச் செயலராக இருந்த கோத்தாபய ராஜபக்சவின் உதவியுடன் ரக்ன லங்கா பாதுகாப்புச் சேவை நிறுவனம், மற்றும் அவன்கார்ட் நிறுவனம் என்பன உருவாக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-212)

# தலவிலவுக்கு விசேட ரயில்



நாளை ஆரம்பமாகும் தலவில புனித அன்னம்மாள் தேவாலயத்தின் வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு மேலதிக ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. மொரட்டுவை, கொழும்பு கோட்டை ஆகிய இடங்களிலிருந்து நான்கு மேலதிக ரயில் சேவைகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. பாலாவி ரயில் நிலையத்திலிருந்து தேவாலயத்திற்கான விசேட பஸ் சேவையும் நடத்தப்படும். ரயில் நிலையத்துக்குச் செல்லும் அடியார்களின் நலன்கருதி சுகாதார வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.
ரயில்வேத் திணைக்களம் இந்த ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது. ரயில் பயணிகளின் நலன்கருதி சிற்றுண்டிச்சாலை ஒன்றும் அமைக்கப்படவிருக்கிறது. (உ)

# பல்கலைக்கழகங்களில் புதிதாக 4 பாடநெறிகள்

2016, 2017ஆம் கல்வியாண்டுக்கான பாடநெறிகளில் புதிதாக நான்கு பாடங்கள் சேர்க்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் சில்வா தெரிவித்தார். இது தொடர்பில் குறிப்பிட்ட அவர், 2016, 2017ம் கல்வியாண்டு எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் ஆரம்பிப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்தக் கல்வியாண்டில் பல்கலைக்கழக அனுமதிக்காக 71 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் விண்ணப்பித்தார்கள். இவர்களில் 29 ஆயிரத்துக்கு மேலான மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் பொறுப்பில் இயங்கும் 14பல்கலைக்கழகங்கள், மூன்று வளாகங்கள், ஐந்து உயர்கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் 109 பாடநெறிகள் நடத்தப்படுகின்றன.
- என்றார். (உ)

# நினைவுப் பேருரை

முன்னால் சபாநாயகர் அல்ஹாஜ் பாக்கீர் மாக்காரின் 20 ஆவது ஞாபகார்த்த நினைவுப் பேருரை எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ளது. தேசிய ஐக்கியத்துக்கான பாக்கீர் மாக்கார் மத்திய நிலையத்தினால் நடத்தப்பட்டுவரும் இந்தத் தொடர் ஞாபகார்த்த உரையின் ஒரு பகுதியாக இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் எம். ஏ பாக்கீர் மாக்கார் அர்ப்பணிப்புடன் மேற்கொண்ட தன்னலமற்ற இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கான பங்களிப்பு தொடர்பில் கவனம் செலுத்தப்படவுள்ளது. (உ)



ஆசிரியர்களின் அர்ப்பணிப்பு

# சம்பளத்துடன் மட்டுப்பட்டதல்ல

பிள்ளைகளுக்கு கல்வியை வழங்கி அவர்களது அறிவை மேம்படுத்துவதற்காக அதிபர், ஆசிரியர்கள் மேற்கொள்ளும் அர்ப்பணிப்பு ஒருபோதும் சம்பளத்துக்கு என மட்டுப்பட்டதல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். அனுராதபுரம் வலிசிங்க சரத்சந்ர மகா வித்தியாலயத்தில் புதிய கட்டடத் தொகுதியை நேற்று முற்பகல் ஜனாதிபதி திறந்துவைக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.அங்கு மேலும் அவர், ஆசிரியர்கள் நல்ல மனநிலையுடன் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியை வழங்குவதற்காக அரசாங்கத்தினால் வழங்கக்கூடிய அனைத்து வசதிகளையும் நிறைவுசெய்வதாகவும் குறிப்பிட்டார். (உ)

# ரணிலுக்கு கௌரவம்



மகிந்த, ஜேவிபி அணிகள் புறக்கணிப்பு

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 40 வருட கால நாடாளுமன்ற அரசியலுக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் விசேட அமர்வு நேற்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்த அமர்வில் மஹிந்த ராஜபக்ஷ சார்பு கூட்டு எதிரணியும் ஜே.வி.பி.யும் கலந்து கொள்ளாது பகிஷ்கரித்தன. சபாநாயகர் கரு ஜயசூரியவின் தலைமையில் நடைபெற்ற இந்த அமர்வில் சபாநாயகர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் உட்பட கட்சித் தலைவர்கள் அமைச்சர்கள் பலரும் பிரதமருக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்து உரையாற்றினர். இ.தொ.கா. சார்பில் இந்த விசேட அமர்வில் ஆறுமுகம் தொண்டமான் சபையில் சமுகமளித்திருந்த போதும் அவர் உரையாற்றவில்லை. மஹிந்த ராஜபக்ச தலைமையிலான கூட்டு எதிர்க்கட்சி மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் எவரும் நேற்று இந்த விசேட அமர்வில் பங்கேற்கவில்லை. (உ)

## நாளை நாளும் கோளும்

06.08.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆடி மாதம் 21ஆம் நாள்

சதுர்த்தி மு.இ 11.16 வரை | உத்தராடம் பி.இ. 03.14 வரை | அமிர்தயோகம் | நல்லூர் மஞ்சம் பட்டினத்தடிகள் குருபூசை

இராகுகாலம் 04.34-06.04 | சுபநேரம் 09.04-10.34 | எமகண்டம் 12.04-01.34

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| செலவு | ஆதரவு | ஈகை | பெருமை | ஆக்கம் | உயர்வு | ஆக்கம் | கவனம் | அமைதி | வரவு | நிம்மதி | நட்டம் |

எதிரொலி
Ethiroli


## அந்த நாள் ஞாபகம்.....!



**1962.08.05**

17 மாதத் தேடுதலின் பின்னர் தென்னாபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலைக்காகப் போராடிய நெல்சன் மண்டேலா கைது செய்யப்பட்டார். இவர் 1990 ஆம் ஆண்டே விடுவிக்கப்பட்டார்.

# ஓவியாவுக்கு ஆதரவாக கொழும்பில் போராட்டம்




நடிகர் கமல்ஹாசன் தொகுத்துவழங்கும் பிக் பாஸ் நிகழ்ச்சியில் நடிகை ஓவியா பங்கேற்றுவருகின்றார். ஓவியாவுக்கு தமிழ்நாட்டில் மாத்திரமின்றி இலங்கை உள்ளிட்ட வெளிநாடுகளிலும் ரசிகர்கள் அதிகரித்துவருகின்றனர். ஓவியா ஆர்மி என பதிவுகளை இட்டுவருகின்றனர். இந்நிலையில் ஓவியாவை நிகழ்ச்சியிலிருந்து இடைநிறுத்த விஜய் ரி.வி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளதாக நேற்று முதல் தகவல்கள் வேகமாகப் பரவின. உடனடியாகவே களத்தில் இறங்கிய ரசிகர்கள் ஓவியா நோ, பிக் பாஸ் நோ எனப் பதிவிட்டுவருகின்றனர். ஓவியாவுக்கு ஆதரவாகப் போராட்டங்களும் ஆங்காங்கே நடைபெறுகின்றன. இந்நிலையில் கொழும்பிலுள்ள ஓவியா ரசிகர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றினை இன்று முன்னெடுத்திருந்தனர். (உ)

# சடலம் மீட்பு



மட்டக்களப்பு, வவுணதீவு, கரவெட்டி கிராமத்தில் மூன்று பிள்ளைகளின் தாயொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நெல்லுச்சேனையில் வசிக்கும் விஸ்ணுகாந்தன் இராசமலர் (வயது 37) என்பவரே, நேற்று மாலை அவரது வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வவுணதீவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட சடலம், பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குடும்பத் தகராறு காரணமாகவே இந்தப் பெண் தற்கொலை செய்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்துள்ளனர். (ஆ)

# சில்லுவண்டில் அன்பளிப்பு



வழக்குகளில் பங்கேற்கும் மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்துவதற்காக சில்லுவண்டில் ஒன்றினை சுதந்திர கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் வடக்கு மாகாணசபை உறுப்பினருமான அகிலதாஸ் சிவக்கொழுந்து வழங்கியுள்ளார்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் வழக்குகளில் பங்கேற்கும் மாற்றுத் திறனாளிகள் படும் கஷ்டங்கள் தொடர்பில் சட்டத்தரணிகள் சங்கம் விடுத்த கோரிக்கைக்கு அமைய சில்லு வண்டில் ஒன்றும் அதற்கான பாதையும் சிமெந்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண சபையின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் 50 ஆயிரம் ரூபா இதற்காக ஒதுக்கப்பட்டு வேலைத்திட்டங்கள் முடிவடைந்த நிலையில் இன்று அதனைக் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. (உ-11)

# முன்னாள் தளபதி விரைவில் கைது?

கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதியில் வசித்து வந்த 11 இளைஞர்கள் கடத்திச் செல்லப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட விவகாரத்தில், முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட நேரடியாகத் தொடர்புபட்டுள்ளார் என கடற்படையின் உயர் அதிகாரிகள் இருவர் குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகளின் போது தகவல் வெளியிட்டுள்ளனர்.

கடற்படையின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க, திருகோணமலைக் கடற்படை முகாமின் சன்சைட் என்ற முகாமுக்கு பொறுப்பாக இருந்த சுமித் ரணசிங்க உட்பட 5 பேர் ஏற்கனவே இது தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த நிலையில் கடற்படைத் தளபதியே இந்த விடயத்தை நெறிப்படுத்தினார் என இரு அதிகாரிகள் சாட்சியம் அளித்துள்ளனர். இதனால் முன்னாள் கடற்படைத் தளபதி கைது செய்யப்படும் நிலை உருவாகியுள்ளது. (ஆ)

# ஜனாதிபதிக்கு கடிதம்





வடக்கு ,கிழக்கில் நடைபெறுகின்ற வன்முறைச் சம்பவங்களின் பின்னால் புனர்வாழ்வு பெற்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் இருப்பதான தோற்றம் பிரமாண்டமான முறையில் வெளிக்காட்டப்படுகின்றது.

இந்நிலைமை முன்னாள் போராளிகளுக்கிடையே அச்சத்தை உருவாக்கி அவர்களுக்கு நிம்மதியற்ற ஒரு எதிர்காலத்தை உருவாக்கிவருகின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அவர் எழுதிய கடிதத்தில்,

"எமது மக்கள் எதிர்பார்த்துக் காத்திருந்த மனிதாபிமான கரிசனைக்குரிய விடயங்கள் எவையும் மக்கள் திருப்தி அடையும் வகையில் மேற்கொள்ளப்படவில்லை என்பதை அரசாங்கம் நன்கறியும். அரசாங்கத்தின் தொடர்ச்சியான தமிழ் மக்கள் மீதான மெத்தனப் போக்கு அதன் மீது எமது மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையை விரைந்து பலமிழக்கச் செய்கின்றது என்பதை சமகால களநிலவரங்கள் பிரதிபலிக்கின்றன.

2009ஆம் ஆண்டில் இறுதியுத்தம் நிறைவு பெற்றபோது சர்வதேச சமூகங்களின் பரிந்துரையின் பேரில் விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்த அனைத்துப் போராளிகளுக்கும் புனர்வாழ்வு அளிக்கப்பெற்று சமூகத்துடன் இணைக்கப்பட்டனர். புனர்வாழ்வு என்பது விடுதலைப்புலிகள் அவர்கள் புரிந்ததாக அரசாங்கம் கருதிய குற்றங்களுக்கு ஒட்டுமொத்த தண்டனையாகவே வழங்கப்பட்டது என்பதைத் தாங்களும் தங்களின் அரசும் நன்கறிவீர்கள்" - என்றுள்ளது. (உ)

# 12 மில்லியன் பெறுமதியான வல்லப்பட்டைகள் கடத்தல்

இலங்கையிலிருந்து சட்டவிரோதமான முறையில் ஒரு தொகை வல்லப்பட்டைகளை கடத்திச் செல்ல முற்பட்ட நான்கு இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க போதை தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று இரவு 9.35 மணியளவில் 9W252 என்ற விமானத்தில் டுபாய் நோக்கி புறப்பட இருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தமது பயணப் பொதியில் மறைத்து இவற்றை கடத்திச் செல்ல முற்பட்ட வேளை , 60 வயது, 45 வயது, 35 வயது மற்றும் 21 வயதுடைய நால்வரே கைது செய்யப்பட்டதாக சுங்க ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். சுமார் 116 கிலோ கிராம் வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றின் பெறுமதி 12 மில்லியன் ரூபா என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. வல்லப்பட்டைகள் சுங்கப் பிரிவினரால் பறிமுதல் செய்யப்பட்டது டன், ஒரு சந்தேகநபரிடம் 700,000 ரூபா வீதம் 28 இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதாகவும் சுங்க ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். (உ)

**நிலாவரை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் அடிப்படையில் நிலாவரையின் ஆழம் சுமார் 55.5 மீற்றர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. அதாவது நன்றாக வளர்ந்த இரண்டு பனை மரங்களை ஒன்றன் மேல் ஒன்றாக நிறுத்தினால் உண்டாகும் உயரத்தை விடவும் நிலாவரைக் கிணற்றின் ஆழம் அதிகம் எனத் தெரிய வந்துள்ளது.

அத்துடன் நிலாவரையின் அடிப்பரப்பில் சிதைந்த நிலையில் மூன்று மாட்டு வண்டில்களும், ஏராளமான சுரங்க அமைப்புகளும் இருப்பதாக ரோபோக்களின் மூலம் பிடிக்கப்பட்ட புகைப்படங்கள்இனம்காட்டியுள்ளன. இந்த மாட்டு வண்டில்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் மூழ்கியவையாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இந்த ஆய்வின் மூலம் நிலாவரைக்கிணறு பற்றி இருந்த பல மர்ம முடிச்சுக்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளன. (ஆ)

**புத்தூரில்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மதிக்கப்பட்டுள்ளார்.

இளைஞன் மீதான தாக்குதல் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

**பதவியை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிட்டுள்ள செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை அலரி மாளிகையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே ஜனாதிபதி ரவி கருணாநாயக்கவுக்கு அதிர்ச்சியூட்டும் உத்தரவை விடுத்துள்ளார்.

"பிணைமுறி விவகாரம் தொடர்பில், அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு எதிராக குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்பட்டுள்ளன. இத்தகைய நிலையில் அவர் அமைச்சரவையில் பணியாற்றுவது, அரசாங்கத்துக்கும் ரவி கருணா நாயக்கவுக்கும் சிக்கலானதாகும். எனவே, இதற்கு சிறந்த தீர்வு பதவியை இராஜினாமா செய்வதே " என்று மைத்திரி ரவி கருணாநாயக்குவுக்கு எடுத்துரைத்துள்ளார். (இ)

**துன்னாலை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந் நிலையில் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

அண்மையில் சட்டவிரோதமாக மணல் அகழச் சென்றவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் உயிரிழந்திருந்தார். இதனையடுத்து துன்னாலைப் பகுதியில் அமைந்திருந்த பொலிஸ் காவலரண் பொது மக்களால் அடித்து நொறுக்கப்பட்டு தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் கைது செய்வதற்காகவே இன்று காலை அந்தப் பகுதி சுற்றிவளைக்கப்பட்டதாக கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

**காணாமற்...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

156 நாட்களைக் கடந்துள்ளது. எனினும், தமது பிரச்சி னைகளுக்கு இதுவரை தீர்வு கிடைக்காத நிலையில், கிழக்கு ஆளுநரிடம் நேற்று மகஜரொன்று கையளிக்கப்பட்டது. மகஜரைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஆளுநர் இவ்வாறு குறிப்பிட்டதாக, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத்தலைவி நாகேந்திரன் ஆஷா தெரிவித்தார். (உ)

# மத்தி-கலைமதி இன்று மோதல்

அளவெட்டி மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது.

இதில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

இதேவேளை, இந்தப் போட்டிக்கு முன்னதாக் 3ஆம் இடத்துக்கான போட்டியில், நாயன்மார்கட்டு பாரதி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஐ)

ஜெனரேட்டர் தேவை

அலுவலக கணினிகளுக்கு ஏற்றவகையில் மின்சாரம் பெறக்கூடிய, 4000 - 5000 வாட்ஸ் வலுவுடைய, பாவித்த சிறிய ரக ஜெனரேட்டர் ஒன்று தேவை.



தொடர்புகளுக்கு
077 657 5907

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 05.08.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.